# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,436 — 1958 ජූලි 25 වැනි සිකුරාදා —25.7.1958**

11,436 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II—சட்ட சம்பந்தமானது

## சுப்பிறீங்கோட் கிறிமினெல் வழக்கு விசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள்

### பிரசித்த பத்திரம்

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: மட்டக்களப்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மட்டக்களப்பு திருகோணமலை டிஸ்திறிக்கைச் சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 11 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோருஞ் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
டபிள்யூ. பத்திரான,
கீழ் மாகாண பிஸ்கால்.

பிஸ்கால் கந்தோர், மட்டக்களப்பு,
1958 ம் ஹூ ஆடி மீ 18 ந் உ.

---

### விளம்பரம

1958 ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 29 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக விருப்பதால், 1958 ம் ஆண்டு ஆவணி (ஒகஸ்ற்) மாதம் 1 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 28 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்ணுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ஹூ (ஜூலை) ஆடி மீ 17 ந் உ.


இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.